## பெப்ரவரி – 24 – பொதுக்கால 07ம் ஞாயிறு

### உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல் நீங்களும் இரக்கமுள்ளவர்களாய் இருங்கள்"(லூக்.6:31)

**முதல் வாசகம்: 1சாமுவேல் 26:2,7– 9,12 –13,22 - 23**

சவுல் சீபு பாலைநிலத்தில் தாவீதைத் தேடுவதற்காக இஸ்ரயேலில் தேர்ந்தெடுக்கப்பட்ட மூவாயிரம் பேருடன் அதை நோக்கி புறப்பட்டு சென்றார். ஆதலால் தாவீதும் அபிசாயும் இரவில் அப்பாளை யத்திற்குச் சென்றனர் சவுல் கூடாரத்தினுள் தூங்குவதையும் அவர் தலைமாட்டில் அவருடைய ஈட்டி தரையில் குத்தியிருப்பதையும் கண்டனர். அபனேரும் படைவீரர்களும் அவரைச் சுற்றிலும் படுத்து உறங்கினர். அபிசாய் தாவீதிடம் இந்நாளில் கடவுள் உம் எதிரியை உம்மிடம் ஒப்புவித்துள்ளார். ஆதலால் இப்பொழுது நான் அவரை ஈட்டியால் இரண்டு முறை குத்தாமல், ஒரே குத்தாய் நிலத்தில் பதிய குத்தப்போகிறேன்" என்றான். ஆனால் தாவீது அபிசாயியை நோக்கி, அவரைக் கொல்லாதே! ஆண்டவரால் திருப்பொழிவு செய்யப்பட்டவர் மேல் கைவைத்துவிட்டுக் குற்றமற்று இருப்பவன் யார்? என்று சொல்லித் தடுத்தார். அவ்வாறே தாவீது சவுலின் தலைமாட்டில் இருந்த ஈட்டியையும் தண்ணிர்க் குவளையையும் எடுத்துக் கொண்டபின் அவர்கள் புறப்பட்டுச் சென்றனர். அவர்களில் ஒருவரும் விழிக்கவில்லை. அதைக் காணவுமில்லை. அறியவுமில்லை. ஆண்டவர் அவருக்கு ஆழ்ந்த உறக்கத்தை அளித்திருந்தபடியால் அவர்கள் எல்லாரும் தூங்கிக் கொண்டிருந்தனர். பின்பு தாவீது கடந்து சென்று தொலைவிலிருந்த ஒரு குன்றின் மீது நின்றார். அவர்களிடையே மிகுந்த இடைவெளி இருந்தது. தாவீது மறுமொழியாக, "அரசே உம் ஈட்டி இதோ உள்ளது இளைஞரில் ஒருவன் இப்புறம் வந்து அதை கொண்டு போகட்டும். அவனவன் நீதிக்கும் உண்மைக்கும் ஏற்ப ஆண்டவர் உம்மை ஒப்புவித்தும் ஆண்டவரால் திருப்பொழிவு செய்யப்பட்டவர் மேல் நான் கை வைக்கவில்லை.

**பதில்பாடல் :** ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர்.

**இரண்டாம் வாசகம் : 1 கொரிந்தியர் 15 : 45 – 49**

சகோதரர் சகோதரிகளே, மறைநூலில் எழுதியுள்ளபடி, முதல் மனிதராகிய ஆதாம் உயிர்பெற்று மனித இயல்புள்ளவர் ஆனார் கடைசி ஆதாமோ உயிர்தரும் தூய ஆவியானார். தூய ஆவிக்குரியது முந்தியது அல்ல் மனித இயல்புக்குரியதே முந்தியது. தூய ஆவிக்குரியது பிந்தியது. முதல் மனிதர் களிமண்ணால் ஆனவர் அவர் மண்ணிலிருந்து வந்தவர். இரண்டாம் மனிதரோ விண்ணிலிருந்து வந்தவர். மண்ணைச் சார்ந்த மனிதர் போலவே மண்ணைச் சார்ந்த யாவரும் இருப்பர். விண்ணைச் சார்ந்த மனிதர் போலவே விண்ணைச் சார்ந்த யாவரும் இருப்பர். எனவே நாம் மண்ணைச் சார்ந்தவரின் சாயலைக் கொண்டிருப்பதுபோல விண்ணைக் சார்ந்தவரின் சாயலையும் கொண்டிருப்போம்.

**நற்செய்தி : லுக்கா 6 : 27 – 38**

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது : "நான் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருக்கும் உங்களுக்குக் கூறுகிறேன். உங்கள் பகைவரிடம் அன்பு கூருங்கள் உங்களை வெறுப்போருக்கு நன்மை செய்யுங்கள். உங்களைச் சபிப்போருக்கு ஆசி கூறுங்கள் உங்களை இகழ்ந்து பேசுவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். உங்களை ஒருகன்னத்தில் அறைபவருக்கு மறுகன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள். உங்கள் மேலுடையை எடுத்துக் கொள்பவர் உங்கள் அங்கியையும் எடுத்துக்கொள்ளப் பார்த்தால் அவரைத் தடுக்காதீர்கள். உங்களிடம் கேட்கும் எவருக்கும் கொடுங்கள். உங்களுடைய பொருள்களை எடுத்துக் கொள்வோரிடமிருந்து அவற்றைத் திருப்பிக் கேட்காதீர்கள். "பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அதையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். உங்களிடம் அன்பு செலுத்து வோரிடமே நீங்கள் அன்பு செலுத்தினால் உங்களுக்கு வரும் நன்மை என்ன? பாவிகளும் தங்களிடம் அன்பு செலுத்துவோரிடம் அன்பு செலுத்துகிறார்களே. உங்களுக்கு நன்மை செய்பவர்களுக்கே நீங்கள் நன்மை செய்தால் உங்களுக்கு வரும் நன்மை என்ன? பாவிகளும் அவ்வாறு செய்கிறார்களே. திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் என எதிர்பார்த்து நீங்கள் கடன் கொடுத்தால் உங்களுக்கு வரும் நன்மை என்ன? ஏனெனில், முழுவதையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் என்னும் நோக்குடன் பாவிகளும் பாவிகளுக்குக் கடன் கொடுக்கிறார்களே. நீங்கள் உங்கள் பகைவரிடமும் அன்பு செலுத்துங்கள் அவர்களுக்கு நன்மை செய்யுங்கள் திரும்பக் கிடைக்கும் என எதிர்பார்க்காமல் கடன் கொடுங்கள். அப்போது உங்கள் கைம்மாறு மிகுதியாய் இருக்கும். நீங்கள் உன்னத கடவுளின் மக்களாய் இருப்பீர்கள். ஏனெனில் அவர் நன்றி கெட்டோருக்கும் பொல்லாதோருக்கும் நன்மை செய்கிறார். உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள். "பிறர் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்காதீர்கள் அப்போதுதான் நீங்களும் தீர்ப்புக்குள்ளாக மாட்டீர்கள். மற்றவர்களைக் கண்டனம் செய்யாதீர்கள் அப்போது தான் நீங்களும் கண்டனத்துக்கு ஆளாக மாட்டீர்கள். மன்னியுங்கள் மன்னிப்புப் பெறுவீர்கள். காடுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும் அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியில் போடுவார்கள். நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும். " என்றார்,

**தியானம்:** பொதுக்காலதின் ஞாயிறு வார இறைவார்த்தைப் பகுதிகள் நம்மை நாம் அடையாளங் கண்டுகொள்ள எமக்கு அழைப்பு விடுக்கின்றது. இன்றைய இரண்டாம் வாசகத்தில் இரண்டாம் மனிதரோ விண்ணிலிருந்து வந்தவர், விண்ணகத்தைச் சார்ந்த மனிதர் போலவே விண்ணைச் சார்ந்த யாவரும் இருப்பர். மண்ணைச் சார்ந்தவரின் சாயலைக் கொண்டிருப்பது போல் விண்ணைச்சார்தவரின் சாயலைக் கொண்டிருப்போம் என்கின்றார். புனித பவுல். கிறிஸ்தவர்களாகி நாம் விண்ணைச் சார்ந்தவரான கிறிஸ்துவின் சாயலை மட்டுமல்ல அவரது இயல்பையும் கொண்டிருக்க வேண்டும். தாவீது மண்ணைச் சார்ந்தவராக இருந்த போதிலும் தன்னைக் கொன்றுவிட கங்கணங்கட்டி நின்ற சவுலைக் கொல்லாது அவருக்கு கருணை காட்டிய செயல் அவர் விண்ணைச் சார்ந்த சாயலுடையவர் என்பதை நமக்குக் காட்டுகின்றது. அவ்வாறே நற்செய்தி வாசகமும் இறையாட்சியில் வாழப்பட வேண்டிய உயர் நெறிகள் இரண்டை நம் கண்முன் கொண்டு வருகின்றன 1,தீமையை நன்மையால் வெல்வது. 2. எல்லோரையும் அன்பு செய்து வாழ்வது. இயேசு அவ் உயர் நெறிகளை கற்பிப்பதோடு விட்டுவிடவில்லை மாறாக அவற்றை வாழ்ந்தும் காட்டினார். எனவேதான் விண்ணைச் சார்ந்தவரான இயேசுவின் சாயலைக் கொண்டிருக்கும் நாம் அவரது இயல்பையும் கொண்டவர்களாக வாழ முற்படுவோமாக.